24.09.2025

OS No: 125/2022

பி.வா.சா. 1 திரு. குமரேசன் த/பெ முருகேசன்.

<u>**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

தாவா சொத்து ஆதியில் முத்துகுமார் மகன் பழனிவேலுக்கு பாத்தியம் என்றால் சரிதான். பழனிவேல் பெயரில் தாவா சொத்திற்கு தனி பட்டா இருந்தது என்றால் சரிதான். தாவா சொத்தை வாதி 03.12.2014 ம் தேதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்து தார்சு வீடு ஒன்று உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீட்டிற்கு வீட்டு வரி ரசீது, மின் இனைப்பு உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீட்டு வரி ரசீதும், மின் இனைப்பு வாதி மாலதி பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். வீட்டு வரி ரசீதும், மின் இனைப்பும் வாதி பெயரில் உள்ளது குறித்து நடவடிக்கை எதுவும் நான் எடுத்துள்ளேனா என்றால் இல்லை. வாதி தாவா சொத்தில் தார்சு வீடு கட்டிட பூமி பூஜை செய்த அன்று நானும் சென்றிருந்தேனா என்றால் சென்றிருந்தேன். பூமி பூஜை எந்த வருடம் செய்யப்பட்டது என்றால் 26.01.2019 அன்று செய்யப்பட்டது. தாவா சொத்திற்கு அருகே உள்ள சொத்தை நான் சித்திரா என்பவரிடம் 08.04.2021 ம் தேதி வா.சா.ஆ.6 பத்திரம் மூலமாக கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 நான் கிரையம் பெற்ற பத்திரம் என்றால் சரிதான். வா.சா.ஆ.6ல் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் எல்லாம் சரியானவை என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.6ல் கண்ட சொத்திற்கு நான்கு மால் ஒன்று எனது சொத்திற்கு அருகே வாதி மாலதியின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்தானது கிரையம் பெறும் பொழுது கையெழுத்து மட்டுமே செய்ய என்னை அழைத்து நான் கையெழுத் செய்துள்ளேன். வா.சா.ஆ.6 பத்திரத்தில் எனது அப்பா கையெழுத்து செய்துள்ளாரா என்றால் தெரியாது. வா.சா.ஆ.6 கிரைய சொத்திற்கு கிரைய பணம் நான் கொடுத்தது என்றால் எனது அப்பாவிடம் கொடுத்து கொடுக்கப்பட்ட பணம். வா.சா.ஆ.6 கிரைய பத்திரத்தில் கண்ட சொத்தை கிரையம் பெறும் பொழுது தாவா சொத்தில் தார்சு வீடு ஒன்று இருந்தது என்றால் சரிதான். தாவா சொத்தை எனது தந்தை பெயரில் கிரையம் பெற சொன்னதில் எனது

தந்தை பெயரில்கிரையம் பெறாமல் வாதி பெயரில் கிரையம் செய்யப்பட்ட விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் 2020 ம் வருடம் பிப்ரவரி மாதம் தெரிய வந்தது. வாதிக்காக நான் தாவா சொத்திற்கு வீட்டு வரி செலுத்தியதாக சொல்வது 2018-2019, 2019-2020 வருடங்களில் என்றால் சரிதான். மேற்படி வரி ரசீது பி.வா.சா.ஆ.3 மற்றும் 4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆகியவை வாதி பெயரில் தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு உரியது என்றால் மேற்படி ஆவணங்களில் உள்ள வீடானது வேறு சொத்தில் உள்ள வீடாகும். எனது கூடுதல் நிரூபண வாக்குமூலத்தில் பி.வா.சா.ஆ.3 மற்றும் பி.வா.சா.ஆ.4 ஆகியவை வேறு சொத்தில் உள்ள வீட்டிற்கானது என சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியுள்ளேன். எனது அப்பா சில சொத்துக்களை எனக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு சொந்தமான வேறு பூர்வீக சொத்துக்களை எனது பெயருக்கு எழுதி தர சொல்லி அவரை நான் தொந்தரவு செய்தேன் என்றால் இல்லை. மேற்படி பூர்வீக சொத்தை எனக்கு எழுதி தர சொல்லி தான் தாவா சொத்தை பொருத்து நான் தொந்தரவு செய்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து எனக்கு சொந்தமானது என்று விளம்புகை பரிகாரமோ, வாதி பெயரில் உள்ள தாவா சொத்திற்கான பத்திரத்தை ரத்து செய்திடவோ கோரி பரிகாரம் எதுவும் நான் கேட்டிடவில்லை என்றால் சரிதான். எனது எதிர் வழக்குரையில் தாவா சொத்திற்கு வாதி பெயரில் கிரைய பத்திரம் ஏற்பட்டதாக சொல்வது உண்மை தான் என சங்கதி குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். எனது சகோதரி மகனுக்கு பள்ளி கட்டணத்தை நான் செலுத்தியதாக சொல்வது உண்மை இல்லை என்றும் வாதி செலுத்தியதை நான் செலுத்தியதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது சகோதரி மகனுக்கு LIC பணம் நான் கட்டியதாக சொல்வது உண்மை அல்ல எனது சகோதரி தான் கட்டனார் என்றால் எனது சகோதரி மகனுக்கு கட்டவில்லை எனது சகோதரிக்கு நான் கட்டினேன். தாவா சொத்தில் வாதி தான் தற்போது வரை குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்து வாதியின் அனுபவத்தில் உள்ளதால் வாதி கோரிய

பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்ககூடியது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6ல் கண்ட நான்குமால் தவறு என திருத்த பத்திரம் ஏற்படுத்திட நடவடிக்கை எடுத்தேனா என்றால் நான்குமால் குறித்து எனக்கு தெரியாது. தாவா சொத்தில் உள்ள வீடானது வாதியின் சுய சம்பாதிய பணத்தை கொண்டு கட்டப்பட்டது என்றும் நான் அதற்காக ஒரு ரூபாய் கூட கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.09.24 16:05:04 +0530